# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# OS.No.8/2024

2026–ம் ஆண்டு ஜுன் திங்கள் 29ஆம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியமாகிய **பி.வா.சா.1 வது** நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.K.அனிதா, கிரேடு 1 பென்ஞ்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேகர் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். அதிலுள்ள விவரங்கள் எனக்குத் தெரியும்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

வாதி என்னுடைய உறவினர் என்றால் சரியல்ல. வாதியை 7 ஆண்டுகளாக எனக்கு பழக்கம். என்னுடைய மூத்த சகோதரர் பெயர் ராஜகோபால். நான் பெரம்பலூரில் சரவணாஹார்டுவேர்ஸ் என்றபெயரில் வியாபாரம் செய்துவருகிறேன் என்றால் சரிதான். சுமார் 35 ஆண்டுகளாக நான் வியாபாரம் செய்துவருகிறேன். என்னுடைய சகோதரர் சரவணா எலக்ட்ரிக்கல் என்ற பெயரில் தனியாக வியாபாரம் செய்துவருகிறார் என்றால் சரிதான். என் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்முன்பு வாதி நீதிமன்றத்தில் என்ன ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்று ஒரு குறிப்பாணை தாக்கல் செய்து நான் பார்த்துள்ளேன். வா.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. சாட்சியிடம் இரண்டு வக்காலத்துகளை காட்டி கேட்டபோது அதில் உள்ள கையெழுத்துகள் என்னுடையது என்று கூறுகிறார். சாட்சியிடம் எதிர்வழக்குரையை காட்டி கேட்டபோது அதில் உள்ள கையெழுத்து என்னுடையது என்று கூறுகிறார். பௌத்திரம் கிராமத்தை சேர்ந்த கந்தசாமி

மகன் சுப்பையா மற்றும் முத்தாள்நாயுடு மகன் லோகநாதனை எனக்கு தெரியாது. நெய்குப்பை கிராமத்தை சேர்ந்த நல்லதம்பி மகன் பொன்னுசாமி என்பவரை எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்துள்ளேன். என்னுடைய எதிர்வழக்குரையில் வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்று நான் மறுக்கவில்லை என்றால் சாட்சி நான் போர்ஜரி என்று சொல்லியுள்ளேன் என்கிறார். வாதியிடம் நான் ரூ.30லட்சம் பெற்றது சம்மந்தமாக காசோலை கொடுத்து அது பணம் ஆகாமல் திரும்பியதால் வாதி என்பெயரில் CC.No.63/2023 என்ற வழக்கு குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் குற்றவாளி என தீர்மானித்து 6 மாதம் மெய்காவல் சிறையும், அபாராதமும் விதிக்கப்பட்டது என்றால் சாட்சி நான் அப்பீல் செய்துள்ளேன் என்று கூறுகிறார். எனது சகோதரர் வாதியிடம் ரூ.5லட்சம் கடன்பெற்றது சம்மந்தமாக வாதி என்சகோதரர் மீது சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.63/2024 என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதிபெயரில் குற்றவியல் வழக்கு சட்டநடவடிக்கை தாக்கல் செய்ததற்கு நீதிமன்றத்தில் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நான் வாதியிடம் தொழில் சம்மந்தமாக ரூ.10லட்சம் கடன் பெற்று சாட்சிகள் முன்னிலையில் கடன் பெற்றுக்கொண்டு வா.சா.ஆ.1 புரோநோட்டை எழுதி கொடுத்துள்ளேன் என்றால் அது சரியல்ல. வா.சா.ஆ.1ல் கண்ட சாட்சிகளை எனக்கு தெரியும் என்றும், இந்த வழக்கிற்காக அவர்களை தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியிடம் பெற்ற கடனை திருப்பிகொடுப்பதில் இருந்து தப்பிபதற்காக பொய்யான காரணங்களை சொல்லி நான் வாதாடுகிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**:

இல்லை

Sd/-Dr. Sathiyamurthy,
Principal District Judge,
Perambalur.